ஆக்கம்- திருமதி S.சானு பிரியதர்சனி
கே/சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி 1

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. தலைக்கு மேல் அஞ்சலி செய்வதற்குரியவர்
 1) இறைவன் 2) குரு 3) சபையோர் 4) பெற்றோர்

2. பரத நாட்டியத்தில் அடவுகளைப் பயிற்சி செய்யும் போது பெருமளவில் பயன்படும் பரதநிலை
 1) முழுமண்டி 2) சமபாதம் 3) அரைமண்டி 4) பார்ஷ்வசூசி

3. அடிப்படையான ஏழு தாளங்கள் 35 தாளங்களாவதற்கான காரணம்
 1) ஜதி 2) கதி 3) துருதம் 4)ஜாதி

4. தசாவதாரங்களை எடுப்பதால் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டுபவர்
 1) சிவன் 2) பிரமா 3) விஷ்ணு 4) முருகன்

5. பாத பேதங்களில் முன்னோக்கிப் பாய்தல் எவ்வாறு அழைக்கப்படும்
 1) உத்ப்ளவனம் 2) ப்ரமரி 3) மண்டலம் 4) பாதசாரிகா

6. சங்ககாலத்தில் குனிப்பு என அழைக்கப்பட்ட கலை
 1) இசை 2) நடனம் 3) நாடகம் 4) கவிதை

7. க்ரீவா பேதம் என்பது
 1) தலையசைவு 2) கண்ணசைவு 3) பாத அசைவு 4) கழுத்தசைவு

8. திஸ்ர ஜாதியும் , சதுஸ்ர ஜாதியும் இணைந்தால் வரும் ஜாதியின் எண்ணிக்கை
 1) 9 2) 7 3) 5 4) 3

9. தித்,; தித்,; தெய்,; இதிலுள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை
 1) 4 2) 8 3) 10 4) 12

10. கிடதக தரிகிட தொம் என்பதன் அடவுச்சொற்கட்டு
 1) தெய் தித்தித் தெய் 3) தெய்தெய் தெய்தித்தித்தெய்
 2) தெய் தெய் தித்தித் தெய் 4) தெய் தெய் தாம்

## பகுதி 2

1)பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக

அ) “U” என்ற அடையாளத்தாற் சுட்டப்படும் இசைக்குறியீடு எது?
ஆ) கூத்தைப் பயிற்றுவிப்பவர் அண்ணாவியார் போல,பரத நடனத்தைப் பயிற்றுவித்து நெறிப்படுத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
இ) இருகைகளிலும் திரிபதாகம் பிடித்து அபிநயிக்கும் தேவஹஸ்தம் ஒன்று தருக
ஈ) “ஏலேலோ ஏலேலோ…” என்ற சந்தத்துடன் பாடப்படும் பாடலுக்குரிய கிராமிய நடனம் எது?
உ) உணர்வுகளால் வெளிப்படுத்தப்படும் அபிநயம் எது?